சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 48/2020**

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியமாகிய **ரகுராமன் என்கிற ரகுநாதன் PW1** வாக்குமுலம் 1869 ஆம் ஆண்டின் 44வது சட்ட விதிகளின் படி / ஏற்பாட்டின்படி திரு.கே.சீனிவாசன், எம்.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதி நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **பெயர்** | **ரகுராமன் என்கிற ரகுநாதன்** | கிராமம் |
| வயது | | தாலுக்கா |
| தகப்பனார் பெய ர் | | ஜாதி |
| கணவர் பெயர் | | சமயம் |
| தொழில் | | |

09.09.2024

**முதல் விசாரணை**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதில் உள்ளது எனது கையெழுத்துத்தான். இதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 01.02.2019 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த பிராமசரி நோட்டு அசல் **வா.சா.ஆ.1** ஆகும். 12.10.2019 தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 14.10.2019 தேதியிட்ட வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.3** ஆகும். 17.04.2012 தேதியிட்ட பிரதிவாதி முத்துக்குமாரசாமி என்பவருக்கு எழுதிக்கொடுத்த அடமானக்கடன் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.

12.08.2020 தேதியிட்ட பிரதிவாதிக்கு சொந்தமான சர்வே எண்.2564 சொத்துக்கான வில்லங்க சான்று இணையதள நகல் **வா.சா.ஆ.5** ஆகும். எனது வழக்கை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

(பிரதிவாதிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது)